**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், மாசி மாதம் 29 ம் நாள்

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.111/2018**

<u>CNR.No.TNCB17-000064-2018</u>

1. R. சுப்பையன்(இறப்பு)
2. சரோஜா
3. சுந்தரேஷன்
4. சுமதி
5. ஜெயந்தி

(Amended as per order in IA .No.17/2024 Dated:19.11.2024) ... **வாதிகள்**

//எதிர்//

1. நடராஜன்(இறப்பு)
2. துளசியம்மாள்
3. ராமாத்தாள் (இறப்பு)
4. கோபால்சாமி
5. கீதா
6. N. துளசியம்மாள்
7. N. சதீஷ் பாபு

(Amended as per order in IA .No. 17/2024 Dated:19.11.2024)

(Amended as per order in IA .No.20/2025 Dated:25.10.2025) ... **பிரதிவாதிகள்**

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள்

தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஜெயந்திநாதன், அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தை அந்நியப்படுத்துதல் அல்லது வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தி அடமானம், குத்தகை, கிரையம் ஆகியவற்றின் மூலம் வழக்கு சொத்தில் எந்த வகையிலும் அத்துமீறி நுழையக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த விடுதலைப் பத்திரம் செல்லாது, போலியானது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் (ஆவண எண்.5549/2018 தேதி 07.06.2018), 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த பிழைத்திருத்தல் பத்திரம் செல்லாது, போலியானது என்று விளம்புகை பரிகாரம் கோரியும் (ஆவண எண்.5937/2018 தேதி 18.06.2018), தாவா செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதிகள் தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்:**

1.1 ). ஆதியில் தாவா சொத்து பழனிக் கவுண்டருக்கு பாத்தியப்பட்டது. வாதி மற்றும் பிரதிவாதிகள் சகோதர சகோதரிகள் ஆவார்கள். மூதாதையர் வழியில் பழனிக்கவுண்டருக்கு ஒதுக்கீடு செய்த சொத்தை அவரது மகன் ரங்கசாமிக் கவுண்டருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. ரங்கசாமி கவுண்டர், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர் கடந்த 03.06.1991 தேதியில் பாகசாசனம் ஏற்படுத்திக் கொண்டனர். அதில் பல்வேறு சொத்துக்களின் வேறுபட்ட க.ச.எண்களில் உள்ள

சொத்துக்கள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது. இவ்வகையில் ரூ.3440.75/- மதிப்புள்ள "A" ஷெட்யூல் சொத்தானது வாதியின் தந்தை ரங்கசாமிகவுண்டருக்கும், ரூ.14,590.00/- மதிப்புள்ள "B" ஷெட்யூல் சொத்தானது வாதிக்கும் மற்றும் ரூ.13,726.25/- மதிப்புள்ள "C" ஷெட்யூல் சொத்தானது 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1.2). ரங்கசாமிகவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட "A" ஷெட்யூல் சொத்தினை தனது வாழ்நாளிலேயே அவர் விற்பனை செய்து விட்டார். வாதிக்கு ஒதுக்கப்பட்ட "B" ஷெட்யூல் சொத்தில் 20 எண்ணிக்கையிலான சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சொத்தின் மதிப்பும் நிர்ணயிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.14490.00/- மட்டுமே. ஆனால் "B" ஷெட்யூல் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00/- வரவேண்டும். "B" ஷெட்யூல் சொத்தில் ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் க.ச.எண் 148/2F-ல் விடுபட்டுள்ளது. இந்த க.ச. எண் 148/2F-ல் விடுபட்ட மற்றொரு சொத்தான ரூ.100 மதிப்புள்ள அயிட்டம் 1-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள "C" ஷெட்யூல் சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதில் "க.ச.148/2F மதிப்பு ரூ.100.00" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் வாயிலாக க.ச.எண் 148/2F-ல் விடுபட்ட மற்றொரு சொத்தான ரூ.100 மதிப்புள்ள சொத்து "B" அட்டவணையில் உள்ள சொத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதன் பின்னரே "B" அட்டவணையில் பகிர்வு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00 சரியாக வரும்.

1.3). தவறுதலாக "B" ஷெட்யூல் சொத்தில் ஒரு அயிட்டம் க.ச.எண் 148/2F-ல் விடுபட்டுள்ளதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு 1ம் பிரதிவாதி 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளை தனக்கு துணையாக பயன்படுத்திக்கொண்டு சொத்தினை அபகரிக்க முயல்கிறார்கள். கடந்த 07.06.2018 அன்று 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 1-ம் பிரதிவாதிக்கு ஆதரவாக விடுதலைப்பத்திரத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். ஆனால் 1-ம் பிரதிவாதிக்கு ஏற்கனவே இந்த க.ச. எண் 148/2F-ல்

விடுபட்டுள்ள சொத்தானது பாகசாசனத்தின் படி வாதிக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியும். விடுதலைப் பத்திரத்தில் பிரதிவாதிகள் தாவா சொத்தில் தட்டச்சு பிழை செய்து, பின்னர் 18.06.2018 அன்று 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்தியுள்ளனர்.

1.4). விடுதலைப் பத்திரத்தில் 1991ம் ஆண்டு பாகசாசனம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. பிழை திருத்தல் பத்திரம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் பிரதிவாதிகள் வருவாய் ஆவணங்களிலும் மோசடியாக தங்களது பெயர்களை சேர்த்துள்ளனர். 1991-ம் ஆண்டு பாகபிரிவினையில் இருந்து வாதி தாவா சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்.

1.5). வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் வாதி இறந்துவிட்டார். 1ம் வாதியின் வாரிசுகள் 2 முதல் 5 வாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேலும் வழக்கு நிலுவையில் உள்ள போது 3ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் 4 மற்றும் 5 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். மேலும் வழக்கு நிலுவையில் உள்ள போது 1ம் பிரதிவாதி இறந்துவிட்டார். அவரது வாரிசுகள் 6 மற்றும் 7 பிரதிவாதிகளாக இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.
(Amended as per order in IA.No.17/2024 Dated:19.11.2024)
(Amended as per order in IA.No.20/2025 Dated:25.10.2025)

**<u>2). 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை 2 முதல் 7 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையாக ஏற்றுக்கொண்டதன் சுருக்கம்:</u>**

2.1). வழக்கு பொய்யானது மோசடியானது, சட்டத்தின் படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டவற்றை தவிர மற்றவற்றை வாதிகளே நிரூபிக்க வேண்டும். வாதியும் பிரதிவாதிகளும் ரங்கசாமி கவுண்டர் மற்றும் பச்சையம்மாள் ஆகியோரின் வாரிசுகள்

ஆவார்கள். வழக்குச் சொத்து, குடும்பத்தின் பூர்வீகச் சொத்து அல்ல. 06.10.1947 அன்று குடும்பத்திற்குள் நடைபெற்ற பாகப்பிரிவினை, ஆவணம் எண் 1720/1947 ஆகப் பதிவு செய்யப்பட்டு "C" அட்டவணை சொத்துக்கள் வாதியின் தாத்தாவான பழனி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது என்றும், அவர் இறந்த பிறகு, அவரது ஒரே மகனான ரங்கசாமி கவுண்டர் அச்சொத்துக்களை வாரிசுரிமை மூலம் பெற்றார்.

2.2). 03.06.1991 தேதியிட்ட, 1991-ஆம் ஆண்டு நடைபெற்ற குடும்பப் பாகப்பிரிவினையின் போது ரங்கசாமி கவுண்டருக்கும், அவரது இரு மகன்களான 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற பிரிவினையின்போது "B" அட்டவணை சொத்துக்கள் வாதிக்கும், "C" அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது. பாகப்பிரிவினை ஆவணத்தில் தங்கள் பங்கிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களைத் தரப்பினர்கள் தங்கள் சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டனர். எனவே, 03.06.1991 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் நடைமுறைக்கு வந்த பிறகு, அது இறுதியானது, அது சம்பந்தப்பட்ட தரப்பினரை முழுமையாகக் கட்டுப்படுத்தும். மேலும், ரங்கசாமி கவுண்டர் தனது வாழ்நாளிலேயே, "A" அட்டவணையில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த சொத்துக்களை விற்றுவிட்டார். அவர் 1995-ஆம் ஆண்டில் காலமானார்.

2.3). க.ச.எண்.148/2F-இல் அமைந்துள்ள வழக்குச் சொத்து, பாகப்பிரிவினைப் பத்திரத்தின் "A" அட்டவணையில் உள்ள வாதியின் பங்கில் வாதிக்கு ஒதுக்கப்படவில்லை என்பது வாதிக்கு நன்றாக தெரியும். இத்தனை ஆண்டுகளாக பாகப்பிரிவினைப் பத்திரத்தை வாதி கேள்விக்கு உட்படுத்தவில்லை. எனவே, அவ்வாறு கேள்வி எழுப்ப அவருக்கு இப்போது சட்டரீதியான தடை (Estoppel) உள்ளது. வழக்குச் சொத்துக்களின் உரிமையாளர் வாதி அல்ல என்பதால், தற்போதைய வழக்கை அவர் தொடர அவருக்கு உரிமை இல்லை. அவரது

கோரிக்கையில் எவ்விதமான (Bonafide) கோரிக்கையும் இல்லை. வாதி வழக்கில் முகாந்திரம் இல்லை. வழக்குச் சொத்தைப் பொறுத்தவரை வாதி ஒரு அந்நியர் என்பதால், இவ்வழக்கைச் தொடர்வதற்கான எவ்விதமான வழக்கு மூலமும் வாதிக்கு இல்லை. மேலும், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 'விடுதலைப் பத்திரங்களை' கேள்விக்கு உட்படுத்த வாதிக்கு உரிமை இல்லை. ஆகையால், வாதியின் கோரிக்கை சட்டத்திற்குப் புறம்பானது, எவ்விதமான தகுதியுமற்றது, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3). வழக்குரை, எதிர்வழக்குரை மற்றும் வழக்கு சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து கடந்த 31.01.2025 அன்று கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டது.**

**4). எழுவினாக்கள்:**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as prayed for? |
| **எழுவினா - 2** | Whether the plaintiffs are entitled to the relief of declaration as prayed for? |
| **எழுவினா - 3** | To what other relief? |

**5). இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விபரம் :-**

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி சுந்தரேசன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 4 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. 3ம் நபர் கோபாலகிருஷ்ணன் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருகூர் கிராம நிர்வாக அலுவலர் ராமசாமி வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.1 குறுக்கு

விசாரணையின் போது பி.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் 7 ம் பிரதிவாதி சதீஷ்பாபு பி.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6). வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-**

வா.சா.1 மூலமாக 03.06.1991 தேதியிட்ட பாகபிரிவினை பத்திரம் வா.சா.ஆ.1 ஆகவும், ரங்கசாமியின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.2 ஆகவும், 07.06.2018 தேதியிட்ட பாகபாத்திய விடுதலைப் பத்திரம் வா.சா.ஆ.3 ஆகவும், 18.06.1919 தேதியிட்ட பிழைதிருத்தல் பத்திரம் வா.சா.ஆ.4 ஆகவும், 10.05.2012 தேதியிட்ட இருகூர் கிராம புல எண்.147/3B, 148/2F-க்கான ரங்கசாமி கவுண்டர், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.1197 கொண்ட சிட்டா வா.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.3 மூலமாக புல எண்.148/2F க்கான சிட்டா வா.சா.ஆ.5 ஆகவும், புல எண்.148/2F க்கான ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ள அ-பதிவேடு வா.சா.ஆ.6 ஆகவும், இருகூர் கிராம செட்டில்மெண்ட் ஜமாபந்தி புத்தகம் பட்டா எண்.1197 க்கான சிட்டா வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.1 வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

**7). பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் ஆவணம்:-**

வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது 06.10.1947 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது. பி.சா.1 மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பி.சா.1 எதிர்வழக்குரையை ஒத்து சாட்சியமளித்துள்ளார்.

**8). வாதிகள் தரப்பு எழுத்துப்பூர்வமான வாதம் :-**

8.1). வாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வா.சா.1 இவ்வழக்கில் 3ம் பிரதிவாதி ஆவார். வா.சா.1 மூலம் 5

ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. வா.சா.1 குறுக்கு விசாரணையில் …… 2018 ல் நானும், என் அக்காவும் பாகப்பிரிவினை செய்ய போகும் போது தான் இருகூர் கிராமம் க.ச.எண்.148/2F சொத்து வா.சா.ஆ.1 பாகப்பிரிவினையில் "B" அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை என தெரிந்துகொண்டோம்" என சாட்சியமளித்துள்ளார். இதனை உடனடியாக அறிந்த வாதித் தரப்பினர், 2018-ஆம் ஆண்டிலேயே இவ்வழக்கை தாக்கல் செய்தனர்.

8.2). 1991 பாகசாசனத்தில் தட்டச்சு பிழை ஆகும். 1991 பாகசாசன பத்திரத்தில் பக்கம் 18 ல் "C" ஷெட்யூல் சொத்து விவரத்தில் "பின்னும் - க.ச.148/2F நெ காலை பு.ஏக்கர் 1.18 ½ க்கு தரம் ரூபாய் 1.59 இதில் சரிபாதி கிழபுறம் பு.ஏக்கர் 0.59 ¼ க்கு தரம் ரூபாய். 0.80 இதற்கு செஸ் ரூபாய் 3.20 ஆக ஒட்டு ரூபாய் 4.00 இதற்கு 25 மடங்கு மதிப்பு ரூ.100.00" இதன் பொருள் க.ச.148/2F இல் "1 பிரதிவாதிக்கு ஒரு ஏக்கர் பரப்பளவில் 50% பங்கு ஒதுக்க திட்டமிடப்பட்டது. கிழக்குப் பகுதியில் 0.59 ¼ 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. பின்னர் க.ச.எண்.148/2F இல் மற்ற 50% பங்கு இருந்தது என்பது தெளிவாகிறது, இது 1-ம் வாதிக்கு ஒதுக்கப்பட உத்தேசிக்கப்பட்டதாகும். 1991-ஆம் ஆண்டு முதல் இந்நாள் வரை க.ச.எண் 148/2F-இன் மேற்குப் பகுதிச் சொத்திற்கு வாதிகள் முழுமையான உரிமையாளர்கள். அவர்கள் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் உள்ளார்கள்.

8.3). மேலும், "B" அட்டவணையின் மொத்த மதிப்பு ரூ. 14,590/- என்று பாகப்பிரிவினைப் பத்திரம் குறிப்பிடுகிறது. 1991-ஆம் ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரத்தின் 9 முதல் 13 வரையிலான பக்கங்கள் "B" அட்டவணையை விவரிக்கின்றன. "B" அட்டவணையில் ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.14,490 மட்டுமே. ஆனால், உண்மையில் "B" அட்டவணையின் கீழ் ஒதுக்கப்பட வேண்டிய மொத்த மதிப்பு ரூ.14,590 ஆகும். இதன் மூலம் ரூ.100 மதிப்பிலான பற்றாக்குறை ஏற்படுகிறது. இவ்வாறு விடுபட்டுள்ள ரூ.100 மதிப்பிலான

சொத்து என்பது, மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சர்வே எண்.148/2F-இல் உள்ள 0.59 ¼ ஏக்கர் நிலப்பரப்பையே குறிக்கிறது.

8.4). சொத்து பூர்வீகச் சொத்தாகும். 2018-ஆம் ஆண்டில் வாதி தரப்பினரிடையே நடைபெற்ற பாகப்பிரிவினையின் போதுதான், பிரதிவாதிகளால் நிறைவேற்றப்பட்ட சட்டவிரோதமான உரிமைத் துறப்பு மற்றும் திருத்த ஆவணங்கள் குறித்து வாதி தரப்பினருக்குத் தெரியவந்தது. இவ்வாவணங்கள் வாயிலாகவே, 1991-ஆம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையில் செய்யப்பட்டிருந்த மாற்றம் குறித்தும் வாதி தரப்பினருக்குத் தெரியவந்தது.

8.5). வா.சா.3 இருகூர் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலர் சாட்சியில் க.ச.எண் 148/2F-இல் கூட்டுப் பட்டா பெறுவதன் நோக்கம், காலஞ்சென்ற ரங்கசாமி கவுண்டரின் மகன்களின் பெயரில் கூட்டு உரிமையை, அதாவது 50% பங்கை ஏற்படுத்துவதே என்பதை இது உணர்த்துகிறது. 50% முதல் வாதியின் பெயரிலும், மீதமுள்ள 50% 1ம் பிரதிவாதியின் பெயரிலும் உள்ளது. குறிப்பாக, பட்டா எண் 1197, 10.05.2012 தேதியிட்ட சர்வே எண்கள்.147/3B மற்றும் 148/2F-க்குரிய சிட்டா ஆவணமானது, இருகூர் கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராலும் (VAO) ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வா.சா.3 சாட்சியம் 1991-ஆம் ஆண்டின் பாகப்பிரிவினை முதல் 2018 வரை, சர்வே எண்.148/2F தொடர்பான வருவாய் ஆவணங்களில் 2-வது மற்றும் 3-வது பிரதிவாதிகளின் பெயரில் எவ்விதப் பெயர் மாற்றமும் (mutation) செய்யப்படவில்லை என்பதையும், பின்னிட்டு அவர்களது பெயர்கள் அதில் சேர்க்கப்பட்டன என்பதை காட்டுகிறது.

8.6). பி.சா.1 முதல் விசாரணையில் "தாவா சொத்துக்கள் எனது தாத்தா ராமசாமிக்கு பட்டாவின் அடிப்படையில் பாத்தியப்பட்ட சொத்தாகும்" ஆனால் அத்தகைய ஆவணங்கள் எதுவும் இந்நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படவில்லை.

பி.சா.1 குறுக்கு விசாரணையில் இருந்து காலஞ்சென்ற ரங்கசாமி கவுண்டருக்குச் சொந்தமான முழுச் சொத்தும் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்கிறது. 1991-ஆம் ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரத்தில், சர்ச்சைக்குரிய 59 சென்ட் நிலம் காலஞ்சென்ற ரங்கசாமி கவுண்டரின் பெயரில் குறிப்பிடப்படவில்லை. முழுச் சொத்தும் பாகப்பிரிவினை செய்யப்பட்டிருந்தும், ஒரு குறிப்பிட்ட பகுதி பாகப்பிரிவினைப் பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால், அப்பகுதி ஏற்கனவே 1ம் வாதி சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டது.

8.7). பி.சா.1 குறுக்கு விசாரணையின் போது பாகப்பிரிவினைப் பத்திரத்தில், 'பொதுச் சொத்து' (common property) எனக் குறிப்பிடும் வகையிலான எந்தவொரு குறிப்பும் இடம்பெறவில்லை" என்பதை பி.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். ஒருவேளை அந்தச் சொத்து 'பொதுவானதாக' இருந்திருக்குமேயானால், மேலே குறிப்பிடப்பட்டவாறு மூவருக்கும் பொதுவான பாதையைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றிருந்தது போலவே, இதைப் பற்றிய குறிப்பும் அப்பத்திரத்தில் இடம்பெற்றிருந்திருக்கும். மேலும், மிகச் சொற்ப அளவான 250 சதுர அடி நிலத்தைப் பொறுத்தவரை, காலஞ்சென்ற ரங்கசாமி கவுண்டரின் மறைவுக்குப் பிறகு, அந்நிலம் 1ம் வாதிக்கு மாற்றப்பட வேண்டும் என்று 1991-ஆம் ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரத்தில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்நிலையில் சர்ச்சைக்குரிய நிலமும் பொதுவானதாக இருந்திருக்குமேயானால், அது குறித்தும் அப்பத்திரத்தில் நிச்சயமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். 1191-ம் ஆண்டு பாகபிரிவினை பத்திரத்தில் க.ச.எண்.148/2F ன் மேல்புற பகுதி 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டது என்பது தட்டச்சு பிழையினால் விடப்பட்டுள்ளது.

8.8). மேலும் பி.சா.1 குறுக்கு விசாரணையில் 1991 பிரிவினை பத்திரத்தில் "B" அட்டவணையில் ரூ.14.590/- மதிப்புள்ள சொத்து இருப்பதாக ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் க.ச.எண்.148/2F இன் 50% 1991 பிரிவினை

பத்திரத்தின்படி ரூ.100/- மதிப்புடையது, பி.சா.1 ஆல் ஒப்புக் கொள்ளப்பட்டது, மீதமுள்ள 50% அதே மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இங்கே நிரூபிக்கப்பட்டுள்ளது. இது 1991 பாகபிரிவினை பத்திரத்தைத் தட்டச்சு செய்யும் போது விடுப்பட்டுள்ளது. "B" அட்டவணையின் மொத்த மதிப்பு ரூ.14,490/- மீதமுள்ள ரூ.100/- மொத்தம் ரூ.14,590/- என்பது க.ச.எண்.148/2F இன் மேற்குப் பகுதி, இது வாதிகளின் உடைமையிலும், அனுபவத்திலும் உள்ளது. பி.சா.1 "என் தாத்தா தனியாக கிரயம் வாங்கியது சம்மந்தமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். சிட்டா தாக்கல் செய்துள்ளோம்" என சொல்லியுள்ளார். ஆனால் ஆவணம் எதுவும் இல்லை.

8.9). 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் பெயர்கள் 2018-க்குப் பின்னரே சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், 1991 காலக்கட்டத்தில் பி.சா.1 வெறும் 6 வயது மட்டுமே நிரம்பிய ஒரு சிறுவன் ஆவார். இந்த வழக்குக்காக 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் விவரங்களைச் சொல்லிக் கொடுத்ததாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார். 1991 முதல் 2018 வரையிலான காலகட்டத்தில் பிரதிவாதிகள் ஏதேனும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால், எவ்வித உரிமையும் இல்லாத நிலையில், 2018-க்குப் பின்னரே அவர்களது பெயர்கள் சட்டவிரோதமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. 1991-ஆம் ஆண்டின் பாகப்பிரிவினைப் பத்திரத்தின் மீதான உரிமை குறித்து ஏதேனும் சர்ச்சை இருந்திருக்குமாயின், பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

8.10). பல்வேறு சர்வே எண்கள் (SF எண்கள்) சம்பந்தப்படும்போது தவறுகள் ஏற்படுவது இயல்பானதே. பிரதிவாதிகள் தாக்கல் செய்த சட்டவிரோதமான 'விடுவிப்புப் பத்திரத்தில்' (Release Deed) ஒரே ஒரு சர்வே எண் மட்டுமே இடம்பெற்றிருந்தபோதிலும், அதிலேயே ஒரு தவறு நிகழ்ந்திருந்தது. அதனை அவர்கள் ஒரு 'திருத்தப் பத்திரத்தின்' (Rectification Deed) வாயிலாகச்

சரிசெய்துகொண்டனர். இந்தச் சட்டவிரோதமான விடுவிப்புப் பத்திரம் மற்றும் திருத்தப் பத்திரம் ஆகியவை 'செல்லாதவை, இப்பத்திரங்கள் வாதி தரப்பினரைக் கட்டுப்படுத்தாது. சர்வே எண்.148/2F-இன் பாதியளவுப் பகுதி 1-ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய பகுதி காலஞ்சென்ற ரங்கசாமி கவுண்டரின் பெயரில் இல்லை என்றும் பி.சா.1 குறிப்பிட்டுள்ளார்.

8.11). மேலும், பிரதிவாதிகள் தங்கள் கோரிக்கைக்காக நிரூபிக்கும் வகையில், நீதிமன்றத்தின் முன் ஒரு ஆவணத்தைக் கூட சமர்ப்பிக்கவில்லை. வாதி தரப்புச் சாட்சி மற்றும் ஆவணங்கள் அனைத்தும், இப்பிரச்சினை குறித்த வாதி வழக்கை நிரூபிக்கக் கூடியது. தாவா பரிகாரம் கிடைக்கத்தக்கது என வாதிடப்பட்டது.

**<u>9). பிரதிவாதிகள் தரப்பு வாதம்</u> :-**

9.1). பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தின் போது வாதியும், பிரதிவாதிகளும் ரங்கசாமி கவுண்டர் மற்றும் பச்சையம்மாள் ஆகியோரின் வாரிசுகள் ஆவார்கள். வழக்குச் சொத்து, குடும்பத்தின் பூர்வீகச் சொத்து அல்ல. 06.10.1947 அன்று குடும்பத்திற்குள் நடைபெற்ற பாகப்பிரிவினை, ஆவணத்தின் படி "C" அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் வாதியின் தாத்தா பழனி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்டது. அவர் இறந்த பிறகு, அவரது ஒரே மகனான ரங்கசாமி கவுண்டர் அச்சொத்துக்களை வாரிசுரிமை மூலம் பெற்றார்.

9.2). 03.06.1991 தேதியிட்ட, 1991-ஆம் ஆண்டு நடைபெற்ற குடும்பப் பாகப்பிரிவினையின் போது ரங்கசாமி கவுண்டருக்கும், அவரது இரு மகன்களான வாதி மற்றும் 1ம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற பாகபிரிவினையின் போது "B" அட்டவணை சொத்துக்கள் வாதிக்கும், "C" அட்டவணை சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது. பாகப்பிரிவினை ஆவணத்தில் தங்கள் பங்கிற்கு

ஒதுக்கப்பட்ட சொத்துக்களைத் தரப்பினர்கள் தங்கள் சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டனர். எனவே, 03.06.1991 தேதியிட்ட பாகப்பிரிவினைப் பத்திரம் நடைமுறைக்கு வந்த பிறகு, அது இறுதியானது, அது சம்பந்தப்பட்ட தரப்பினரை முழுமையாகக் கட்டுப்படுத்தும். மேலும், ரங்கசாமி கவுண்டர் தனது வாழ்நாளிலேயே, "A" அட்டவணையில் தனக்கு ஒதுக்கப்பட்டிருந்த சொத்துக்களை விற்றுவிட்டார். அவர் 1995-ஆம் ஆண்டில் காலமானார்.

9.3). க.ச.எண் 148/2F-இல் அமைந்துள்ள வழக்குச் சொத்து, பாகப்பிரிவினைப் பத்திரத்தின் "A" அட்டவணையில் உள்ள வாதியின் பங்கில் வாதிக்கு ஒதுக்கப்படவில்லை என்பது வாதிக்கு நன்றாக தெரியும். இத்தனை ஆண்டுகளாக பாகப்பிரிவினைப் பத்திரத்தை வாதி கேள்விக்கு உட்படுத்தவில்லை. எனவே, அவ்வாறு கேள்வி எழுப்ப அவருக்கு இப்போது சட்டரீதியான தடை (Estoppel) உள்ளது. வழக்குச் சொத்துக்களின் உரிமையாளர் வாதி அல்ல என்பதால், தற்போதைய வழக்கை அவர் தொடர அவருக்கு உரிமை இல்லை.

9.4). வாதி வழக்கில் முகாந்திரம் இல்லை. வழக்குச் சொத்தைப் பொறுத்தவரை வாதி ஒரு அந்நியர் என்பதால், இவ்வழக்கை தொடர்வதற்கான எவ்விதமான வழக்கு மூலமும் வாதிக்கு இல்லை. மேலும், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 'விடுதலைப் பத்திரங்களை' கேள்விக்கு உட்படுத்த வாதிக்கு உரிமை இல்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதிடப்பட்டது.

**<u>10). எழுவினா 1க்கான தீர்வு:-</u>**

| | |
|---|---|
| **எழுவினா - 1** | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as prayed for? |

**10.1). இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101-ன்படி தரப்பினர் எவர் ஒருவர் தனது சட்டப்படியான உரிமை அல்லது பொறுப்பு குறித்து தான் கூறும் சங்கதியை நீதிமன்றம் ஏற்று தீர்ப்பு வழங்கவேண்டும் என்ற சங்கதியை முன் வைக்கின்றாரோ, அந்தநபரே அந்த சங்கதியை மெய்ப்பிக்கவேண்டியதாகும்.**

10.2). இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதா என்பதையும், வாதிகள் வழக்கு சொத்தில் அனுபவம் மற்றும் சுவாதீனத்தை ஆவணங்கள் மூலமாக நிரூபித்துள்ளார்களா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும். இருதரப்பிலும், வாதி பிரதிவாதிகளின் உறவு முறை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இரு தரப்பிலும் 03.06.1991 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலமாக ரங்கசாமி கவுண்டர், 1ம் வாதி, 1ம் பிரதிவாதி ஆகியோர் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்பதும், அதில் "A" அட்டவணை சொத்து ரங்கசாமி கவுண்டருக்கும், "B"-அட்டவணை சொத்து 1ம் வாதிக்கும், "C" - அட்டவணை சொத்து 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ரங்கசாமி கவுண்டருக்கு ஒதுக்கப்பட்ட ஏ அட்டவணை சொத்தை அவர் விற்பனை செய்து விட்டார் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

10.3). வாதி தரப்பில் மேற்படி பாகப்பிரிவினையின் போது பி அட்டவணை சொத்தாக 20 எண்ணிக்கையிலான சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் அதன் மொத்த மதிப்பு 14490 என்றும் ஆனால் பி அட்டவணை சொத்தின் மொத்த மதிப்பு ரூபாய் 14,590 என வரவேண்டும் என்றும், B – அட்டவணை சொத்தில் ரூபாய் 100 மதிப்புள்ள ஒரு அயிட்டம் க.ச.148/2F விடுபட்டுள்ளது. க.ச.148/2F விடுபட்டுள்ள மற்றொரு சொத்தான ரூபாய் 100 மதிப்புள்ள ஒரு அயிட்டம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சி அட்டவணை சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என சொல்லப்பட்டுள்ளது. மேற்படி க.ச.148/2F ஆனது வழக்கு சொத்தாகும்.

10.4). வாதி தரப்பில் சொல்லப்பட்டவாறு பி - அட்டவணை சொத்தில் ஒரு அயிட்டம் சொத்து க.ச.எண்.148/2F சொத்தானது விடுபட்டுள்ளதா? என்பதையும், வாதி தரப்பில் சொல்லப்பட்டவாறு பி - அட்டவணை சொத்தில் ஒரு அயிட்ட சொத்து க.ச.148/2F ஆனது விடுபட்டுள்ளது என்பது வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதையும் பரிசீலிக்க வேண்டும். வாதி தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்கள் மூலமாக வாதி வழக்கு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை பரிசீலனை செய்ய வேண்டும்.

10.5). வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 03.06.1991 பாகப்பிரிவினை ஆவணத்தை பரிசீலனை செய்கையில் ரங்கசாமி கவுண்டர் அவரது குமாரர்கள் சுப்பையன், நடராஜன் ஆகியோர் எழுதி வைத்துக்கொண்ட பாகசாசன பத்திரம் என்பதும், அதில் ஏ - அட்டவணை சொத்து ரங்கசாமி கவுண்டருக்கும், பி - அட்டவணை சொத்து (1ம் வாதி) சுப்பையன் அவர்களுக்கும், சி - அட்டவணை சொத்து (1ம் பிரதிவாதி) நடராஜன் அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் ரங்கசாமி கவுண்டர் 13.10.1995 தேதியில் இறந்துவிட்டார் என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் 1ம் பிரதிவாதிக்கு அவரது சகோதரிகளான 2 மற்றும் 3 பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்த பாகபாத்திய விடுதலை பத்திரம் என்பதும், இருகூர் கிராம க.ச.எண்.148/2F சொத்து குறித்தும், அதில் அவர்களுக்கு பொதுவில் பாத்தியப்பட்ட 2/4 பங்கு சொத்து குறித்தும் பாகபாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது.

10.6). மேற்படி விடுதலை பத்திரத்தில் ஏற்பட்ட பிழையை திருத்தம் செய்ய வேண்டி வா.சா.ஆ.4 பிழை திருத்தல் பத்திரம் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், க.ச.148/2F காலையில் நடராஜன் பங்குக்கும் கிழக்கு என்பது க.ச.148/2F காலையில் நடராஜன் பங்குக்கும் மேற்கு என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை

செய்கையில் வழக்கு புல எண்.148/2F சொத்துக்கு நடராஜன் (1ம் பிரதிவாதி), துளசியம்மாள் (2 ம் பிரதிவாதி), ராமாத்தாள் (3 ம் பிரதிவாதி), சரோஜினி, சுந்தரேசன் (3 ம் வாதி), ஜெயந்தி (5 ம் வாதி), சுமதி (4 ம் வாதி) ஆகியோர் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

10.7). வா.சா.ஆ.6 அ-பதிவேடு ஆவணத்தை பரிசீலனைச் செய்கையில் புல எண்.148/2F என்பது ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.7 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் புல எண்.148/2F என்பது ரங்கசாமி கவுண்டர் பெயரில் அ - பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், மேற்படி ஆவணத்தில் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் குறித்து பழனி கவுண்டர் மகன் ரங்கசாமி கவுண்டர் -1, ரங்கசாமி கவுண்டர் மகன் சுப்பையன் - 2 பெயரில் செட்டில்மெண்ட் ஜமாபந்தி சிட்டா ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. வழக்கு சொத்து புல எண்.148/2F சொத்துக்கு நடராஜன் (1ம் பிரதிவாதி), துளசியம்மாள் (2ம் பிரதிவாதி), ராமாத்தாள் (3ம் பிரதிவாதி), சரோஜினி, சுந்தரேசன் (3ம் வாதி), ஜெயந்தி (5ம் வாதி), சுமதி (4ம் வாதி) ஆகியோர்கள் பெயரில் அ-பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதையும், பின்னிட்டு வழக்கு சொத்து புல எண்.148/2F-க்கு 1ம் பிரதிவாதி பெயரில் அடங்கல் பதிவேடு ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேற்படி இருகூர் கிராம ஜமாபந்தி சிட்டாவில் கூட்டாக ரங்கசாமி கவுண்டர் மற்றும் சுப்பையன் பெயரில் ஏற்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் இருகூர் கிராம புல எண்.147/3B மற்றும் 148/2F சொத்து குறித்து ரங்கசாமி கவுண்டர், சுப்பையன் மற்றும் நடராஜன் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்பதை அறிய முடிகிறது.

10.8). வா.சா.2 ஆக கோபாலகிருஷ்ணன் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் "வாதி, பிரதிவாதிகளின் குடும்ப உறவுகள் குறித்த விபரங்கள் தெரியும். தாவா சொத்தின் கிழபுறம் உள்ள சொத்தானது

வா.சா.2 க்கு பாத்தியப்பட்டது என்றும், தாவா சொத்தானது 1வது வாதி சுப்பையன், 1வது பிரதிவாதி நடராஜன் மற்றும் அவர்களது தந்தையார் ராமசாமி கவுண்டர் ஆகியோருக்கிடையே 03.06.1991ம் தேதியில் பாகசாசனம் ஏற்பட்டதின் அடிப்படையில் 148/2F காலையில் தனக்கு ஒதுக்கப்பட்ட "B" பாக சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வந்தார். தாவா சொத்தில் மொத்தம் உள்ள 1.18 ஏக்கரில் 59 சென்ட் வாதிகளுக்கும் 59 சென்ட் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது. 1ம் வாதி சுப்பையன் அவர்களின் மறைவுக்குப் பிறகு அவரது மகன் 3ம் வாதி சுந்தரேசன் தாவா சொத்தின் சுவாதீனத்தில் உள்ளார்" என சாட்சியமளித்துள்ளார்.

10.9). வா.சா.2 குறுக்கு விசாரணையில் "03.06.1991ல் ஏற்பட்ட பாகசாசன பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பாகசாசன பத்திரத்தை படித்து பார்க்காமல் எனது பிரமாண வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் தாவா சொத்தில் மொத்தம் உள்ள ஏக்கர் 1.18 சென்ட்டில் 59 சென்ட் வாதிகளுக்கும், 59 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என எவ்வாறு சொல்கிறேன் என்றால், 1ம் வாதி சொன்னார். பாகசாசனத்தை பார்க்காத நிலையில் நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் வாதி 148/2F காலையில் தனக்கு ஒதுக்கப்பட்ட "B" பாக சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால் 1ம் வாதி சொல்லி தெரியும்" என சாட்சியமளித்துள்ளார். வா.சா.2 சாட்சி முதல் விசாரணையில் மேற்கண்டவாறு தாவா சொத்தில் உள்ள மொத்தம் ஏக்கர் 1.18 சொத்தில் 59 சென்ட் 1ம் வாதிக்கும், 59 சென்ட் 1ம் பிரதிவாதிக்கும் ஒதுக்கப்பட்டது என சொல்லியுள்ள நிலையில், அது 1ம் வாதி சொல்லியதன் பேரில் சாட்சியமளித்துள்ளார் என குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே வா.சா.2 சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல.

10.10). வா.சா.3 ஆக இருகூர் கிராம நிர்வாக அலுவலர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்தில் "வா.சா.ஆ.5, 148/2F சிட்டா படி

ரங்கசாமி மகன் நடராஜன் பெயரில் உள்ளது. ரங்கசாமி மகள் துளசியம்மாள், ரங்கசாமி மகள் ராமாத்தாள், லேட் சுப்பையன் மனைவி சரோஜினி, லேட் சுப்பையன் மகன் சுந்தரேசன், லேட் சுப்பையன் மகள் ஜெயந்தி, லேட் சுப்பையன் மகள் சுமதி என்பவர்கள் பெயரில் உள்ளது. ரங்கசாமி மகள் துளசியம்மாள், ரங்கசாமி மகள் ராமாத்தாள் ஆகியவர்களின் பெயர்கள் எந்த காலகட்டத்தில் சிட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் 06.11.2023 அன்று சேர்க்கப்பட்டுள்ளது. 1991 ல் ரங்கசாமி கவுண்டர் குடும்பத்திற்கு இடையே பாகசாசனம் ஏற்படுத்தப்பட்டது என்றும், அதற்கு பின்னிட்டு வருவாய் ஆவணங்கள் யார் பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் 21.07.2000 தேதியில் சர்வே எண்.148/2F காலையில் ரங்கசாமி கவுண்டர் மகன் சுப்பையன் பெயர் கூட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் துளசியம்மாள், ராமாத்தாள் பெயர் 06.11.2023 அன்று சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சொத்தின் அ - பதிவேடு ப. ரங்கசாமி கவுண்டர் பெயரில் உள்ளது. 2018 ம் ஆண்டு வரை மேற்படி சொத்தின் வருவாய் ஆவணங்கள் ரங்கசாமி மற்றும் அவரது இரண்டு மகன்கள் சுப்பையன், நடராஜன் பெயர்களில் உள்ளது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

10.11). வா.சா.3 குறுக்கு விசாரணையில் "வா.சா.ஆ.7 புல எண்.148/2F யார் பெயரில் ஆரம்பத்தில் உள்ளது என்றால் ரங்கசாமி கவுண்டர் பெயரில் தான் இருந்தது. MTR நம்பர் 745/S/2000 தேதி 21.07.200 உத்தரவைக் கொண்டு வந்தால் தான் அதன் பின்னிட்டு யார் யார் பெயரில் கூட்டாக ஏற்பட்டது என்று தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் ரங்கசாமி பெயர் மட்டும் உள்ளது என்றால் சரிதான். இன்றைய தேதியில் வருவாய் துறை ஆவணங்கள் படி புல எண்.148/2F கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளார்.

10.12). மேற்படி சாட்சியத்தில் இருந்து 1991 பாகப்பிரிவினைக்கு பின்னிட்டு 21.07.2000 தேதியில் ரங்கசாமி கவுண்டர் மகன் சுப்பையன் பெயர் கூட்டாக

ஏற்பட்டுள்ளது என்பதும், பின்னிட்டு வா.சா.ஆ.5 ஆவணப்படி சிட்டாப் படி ரங்கசாமி மகன் நடராஜன், ரங்கசாமி மகள் துளசியம்மாள், ரங்கசாமி மகள் ராமாத்தாள், சுப்பையன் மனைவி சரோஜினி, சுப்பையன் மகன் சுந்தரேசன், சுப்பையன் மகள் ஜெயந்தி, சுப்பையன் மகள் சுமதி என்பவர்கள் பெயரில் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

10.13). வா.சா.1 குறுக்கு விசாரணையில் வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தகப்பனாருக்கு ஒதுக்கிய "B" அட்டவணை சொத்தில் இருகூர் கிராமம் க.ச.148/2F குறித்து குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இருகூர் கிராமம் க.ச.148 சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 1.18 ½ சென்ட் சொத்து ரங்கசாமி கவுண்டருக்கு பட்டா மூலம் பாத்தியம் என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் 1991ல் எழுதப்பட்டது என்றும், அப்போதே தாவா சொத்தின் ஒரு பகுதி 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான், என் தாத்தா 1995-ல் இருந்தார் 1991 முதல் 1995 வரை என் தாத்தாவும், அப்பாவும் பிழை திருத்தம் செய்ய முயற்சி செய்யவில்லை என்றால், ஆவணம் பிழை ஏற்பட்டது பற்றி எங்களுக்கு தெரியாது. 59 ½ சென்ட் நிலத்தில் நானும் என் அப்பாவும் தனி சுவாதீனத்தில் இருந்தோம் என்பதை காட்ட எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன்" என சாட்சியமளித்துள்ளார்.

10.14). ஆனால் மேற்படி 59 சென்ட்டில் வாதியும் அவரது தகப்பனாரும் தனி சுவாதீனத்தில் இருந்தார்கள் என்று காட்ட எவ்விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. வாதிகள் தரப்பில் 1991 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை முதல் தாவா சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் வாதிகள் இருந்து வருகின்றனர் என சொல்லியுள்ள நிலையில் 1991 ஆம் ஆண்டு முதல் வழக்கு தாக்கல் செய்யும் வரை 2018 வரை உண்டான வாதிகளின் தனித்த அனுபவம் மற்றும் சுவாதீனத்தை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி

தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 சிட்டா ரங்கசாமி கவுண்டர், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்பதும் அறிய முடிகிறது. மேலும் வழக்கு சொத்து சுப்பையனுக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ள நிலையில், மேற்படி 1991 ஆம் வருட பாகப்பிரிவினை ஆவணத்தில் தவறு ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தை திருத்தம் செய்ய வாதிகள் தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

10.15). வாதி தரப்பில் வழக்குரை மற்றும் சாட்சியத்தில் "எனது தந்தையார் சுப்பையனுக்கு ஒதுக்கப்பட்ட "B" செட்யூல் சொத்தில் 20 எண்ணிக்கையிலான சொத்துக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு சொத்தின் மதிப்பும் நிர்ணயிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.14490.00 மட்டுமே. ஆனால் "B" செட்யூல் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00 வரவேண்டும். "B" செட்யூல் சொத்தில் ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் க.ச.எண்.148/2F-ல் விடுபட்டுள்ளது. இந்த க.ச.எண்.148/2F-ல் விடுபட்ட மற்றொரு சொத்தான ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள "C" செட்யூல் சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக க.ச.எண்.148/2F-ல் விடுபட்ட மற்றொரு சொத்தான ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் "B" அட்டவணையில் உள்ள சொத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதன் பின்னரே "B" அட்டவணையில் பகிர்வு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00 சரியாக வரும்" என சொல்லப்பட்டுள்ளது.

10.16). ஆனால் வாதி தரப்பு வாதத்தின் போது "க.ச.எண்.148/2F-இன் மேற்குப் பகுதி, 1991-ஆம் ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், தட்டச்சு பிழைகள் காரணமாகத் தவறுதலாக விடுபட்டது. மேலும் க.ச.எண்.148/2F இன் 50% 1991 பாகபிரிவினை பத்திரத்தின்படி ரூ.100/- மதிப்புடையது, பி.சா.1 ஆல் ஒப்புக் கொள்ளப்பட்டது, மீதமுள்ள 50% அதே மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும் என்பது இங்கே நிரூபிக்கப்பட்டுள்ளது. இது

1991 பாகபிரிவினை பத்திரத்தைத் தட்டச்சு செய்யும் போது விடப்பட்டுள்ளது. "B" அட்டவணையின் மொத்த மதிப்பு ரூ. 14,490/- மீதமுள்ள ரூ.100/- மொத்தம் ரூ.14,590/- என்பது க.ச.எண்.148/2F இன் மேற்குப் பகுதி, இது வாதிகளின் உடைமையிலும் அனுபவத்திலும் உள்ளது" என சொல்லப்பட்டுள்ளது.

10.17). எனவே வாதி வழக்குரை மற்றும் சாட்சியத்தில் 1ம் வாதிக்கு மொத்தம் ரூ.14490.00 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் "B" செட்யூல் சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00 வரவேண்டும். "B" செட்யூல் சொத்தில் ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் ரூ.100 மதிப்புள்ள க.ச.எண்.148/2F ல் உள்ள 1 அயிட்டம் 1ம் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள "C" செட்யூல் சொத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. க.ச.எண்.148/2F-ல் விடுபட்ட மற்றொரு சொத்தான ரூ.100 மதிப்புள்ள 1 அயிட்டம் "B" அட்டவணையில் உள்ள சொத்தில் சேர்க்கப்பட வேண்டும். அதன் பின்னரே "B" அட்டவணையில் பகிர்வு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.14590.00 சரியாக வரும் என சொல்லிவிட்டு, அதற்கு முரணாக வாதி தரப்பு வாதத்தின் போது க.ச.எண்.148/2F-இன் மேற்குப் பகுதி, 1991-ஆம் ஆண்டு பாகப்பிரிவினைப் பத்திரத்தில் 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும், தட்டச்சு பிழைகள் காரணமாகத் தவறுதலாக விடுபட்டது. மேலும் க.ச.எண்.148/2F இன் 50% 1991 பாகபிரிவினை பத்திரத்தின்படி ரூ.100/- மதிப்பு 1991 பாகபிரிவினை பத்திரத்தைத் தட்டச்சு செய்யும் போது விடப்பட்டுள்ளது. "B" அட்டவணையின் மொத்த மதிப்பு ரூ. 14,490/- மீதமுள்ள ரூ.100/- மொத்தம் ரூ.14,590/- என்பது க.ச.எண்.148/2F இன் மேற்குப் பகுதி, இது வாதிகளின் உடைமையிலும் அனுபவத்திலும் உள்ளது என சொல்லியுள்ளார். எனவே வாதி தரப்பு வழக்குரை மற்றும் சாட்சிக்கு முரணாக எழுத்துப்பூர்வமான வாதம் அமைந்துள்ளது.

10.18). வாதிகள் தரப்பில் 1991 ஆம் ஆண்டு முதல் வழக்கு சொத்தின் அனுபவம் மற்றும் சுவாதீனத்தில் இருந்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதற்கான எந்த ஒரு வருவாய் ஆவணங்களோ, வரி ரசீது வாதிகள் தரப்பில்

முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் வழக்கு சொத்து சுப்பையனுக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ள நிலையில், அது சம்பந்தமாக வாதி விளம்புகை பரிகாரம் கோரி இருக்க வேண்டும். அவ்வாறு வழக்கு சொத்து குறித்து விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர இயலாது.

10.19). மேற்கண்ட பரிசீலனைகளில் இருந்து வாதிகள் வழக்கு சொத்தில் தனித்த அனுபவம் மற்றும் சுவாதீனத்தை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. எனவே வழக்கு சொத்தின் தனித்த அனுபவம் மற்றும் சுவாதீனத்தை வாதிகள் நிரூபிக்காததால் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தை அந்நியப்படுத்துதல் அல்லது வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தி அடமானம், குத்தகை, கிரையம் ஆகியவற்றின் மூலம் வழக்கு சொத்தில் எந்த வகையிலும் அத்துமீறி நுழையக் கூடாது என்று வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**11). எழுவினா - 2 க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா - 2** | Whether the plaintiffs are entitled to the relief of declaration as prayed for? |

11.1). வழக்கு சொத்தில் வாதிகளின் தனித்த அனுபவம் மற்றும் சுவாதீனத்தை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. எனவே வழக்கு சொத்தின் தனித்த அனுபவம் மற்றும் சுவாதீனத்தை வாதிகள் நிரூபிக்காததால் வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என எழுவினா 1க்கு தீர்வு கண்டுள்ள நிலையில் 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3 பிரதிவாதிகளாகல் ஏற்படுத்திக்கொடுத்த விடுதலைப் பத்திரம் (ஆவண எண்.5549/2018 தேதி 07.06.2018) மற்றும்

பிழைத்திருத்தல் பத்திரம் (ஆவண எண்.5937/2018 தேதி 18.06.2018) செல்லாது, போலியானது என்று வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 2 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**12). எழுவினா 3:-**

| | |
|---|---|
| **எழுவினா - 3** | To what other relief? |

எழுவினா 1 மற்றும் 2 ஆனது மேற்கண்டவாறு தீர்வுகாணப்பட்டதால் வேறு எந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 3 க்கு தீர்வு காணப்படுகிறது.

**13). முடிவாக,**

பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ வழக்கு சொத்தை அந்நியப்படுத்துதல் அல்லது வில்லங்க விவகாரங்களுக்கு உட்படுத்தி அடமானம், குத்தகை, கிரையம் ஆகியவற்றின் மூலம் வழக்கு சொத்தில் எந்த வகையிலும் அத்துமீறி நுழையக் கூடாது என்று வாதிகள் கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது.

1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த விடுதலைப் பத்திரம் (ஆவண எண்.5549/2018 தேதி 07.06.2018) செல்லாது, போலியானது என்று வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது. 1ம் பிரதிவாதிக்கு ஆதரவாக 2 மற்றும் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொடுத்த பிழைத்திருத்தல் பத்திரம் (ஆவண எண்.5937/2018 தேதி 18.06.2018) செல்லாது, போலியானது என்று வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகையை அவரவர்களே

ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 13-ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**சூலூர்.**

**<u>சாட்சிகள் மற்றும் சான்றாவணப் பட்டியல்:</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>**

வா.சா.1 - சுந்தரேசன்

வா.சா.2 - கோபாலகிருஷ்ணன்

வா.சா.3 - ராமசாமி (கிராம நிர்வாக அலுவலத், இருகூர்)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.06.1991 | பாகபிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 20.10.1995 | ரங்கசாமியின் இறப்பு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.3 | 07.06.2018 | பாகபாத்திய விடுதலைப் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 18.06.2018 | பிழைதிருத்தல் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 28.07.2025 | புல எண்.148/2F க்கான சிட்டா | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 28.07.2025 | புல எண்.148/2F க்கான ரங்கசாமி | உண்மை நகல் |

| | | | |
|---|---|---|---|
| | | கவுண்டர் பெயரில் உள்ள அ-பதிவேடு | |
| வா.சா.ஆ.7 | 28.07.2025 | இருகூர் கிராம செட்டில்மெண்ட் ஜமாபாந்தி புத்தகம் பட்டா எண்.1197 க்கான சிட்டா | உண்மை நகல் |
| வா.சா.ஆ.8 | 10.05.2012 | இருகூர் கிராம புல எண்.147/3B, 148/2F குக்கான ரங்கசாமி கவுண்டர், 1ம் வாதி மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டா எண்.1197 கொண்ட சிட்டா | பதிவிறக்க நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:**

பி.சா.1 - சதீஷ்பாபு

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:**

| **ஆவண. எண்.** | **தேதி** | **ஆவணம்** | **ஆவணத்தின் தன்மை** |
|---|---|---|---|
| பி.சா.ஆ.1 | 06.10.1947 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர்

அசல் வழக்கு எண்.111/2018

வரைவு/செவ்வை தீர்ப்புரை

நாள்: 13.03.2026